ஒரே நாடு, ஒரே தேர்தல் பா.ஜ.க.வின் திசைதிருப்பும் தந்திரம்!

ராகுல் காந்தி கண்டனம்!

புதுடெல்லி, செப். 26- உண்மையான பிரச்சினைகளில் இருந்துமக்களைத் திசைதிருப்பும் பா.ஜ.க.வின் தந்திரங்களில் ஒன்றுதான் 'ஒரே நாடு, ஒரே தேர்தல்' திட்டம் என்று காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி குற்றம் சாட்டினார்.

2024 மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க.வுக்கு எதிர்பாராத முடிவு கிடைக்கும்' என்றும் அவர் கூறினார்.

அஸ்ஸாமின் பிரதிதின் மீடியா நெட்வொர்க் சார்பில் தில்லியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கருத்தரங்கில் ராகுல் காந்தி பங்கேற்றுப் பேசியதாவது:

சொத்துகள் ஓரிடத்தில்குவிதல், பொருளாதார ரீதியில் பெரும் ஏற்றத் தாழ்வுகள், வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிப்பு, தாழ்த் தப்பட்டோர், பழங்குடியினர் மற்றும் இதர பிற்படுத்தப்பட்டோருக்கு இழைக்கப்படும் பெரும் அநீதிகள், கடுமையான விலைவாசி உயர்வு போன்றவை, நாட்டில் தற்போது நிலவும் உண்மையான பிரச்சினைகளாகும்.

ஆனால், இப்பிரச்சினைகளில் இருந்து மக்களைத் திசைதிருப்ப பல்வேறு தந்திரங்களை பா.ஜ.க. கையாண்டு வருகிறது. 'ஒரே நாடு,

ஒரே தேர்தல் திட்டம், பகுஜன் சமாஜ் எம்.பி. டேனிஷ் அலி குறித்து பா.ஜ.க. எம்.பி. ரமேஷ் பிதூரி பேசிய சர்ச்சை கருத்து, இந்தியாவின் பெயர் விவகாரம் போன்ற அனைத்துமே பா.ஜ.க.வின் திசைதிருப்பும் தந்திரங்கள்.

ஜாதிவாரி கணக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று நாங்கள் கோரி வருகிறோம். இந்திய மக்கள் எதிர்பார்க்கும் அடிப்படையான விஷயம் ஜாதிவாரி கணக்கெடுப்பு என்பது பா.ஜ.க.வுக்கும் தெரியும். ஆனால், இதுகுறித்து விவாதிக்க அவர்கள் விரும்பவில்லை.

ஜாதிவாரி கணக்கெடுப்பு கோரிக்கையை எழுப்பும்போதெல்லாம், திசைதிருப்பும் தந்திரத்தில் பா.ஜ.க. ஈடுபடுகிறது. ஆனால், அந்தத் தந்திரத்தை எப்படி எதிர்கொள்ள வேண்டும் என் பது எங்களுக்குத் தெரியும் என்றார் ராகுல்.

எதிர்வரும் பேரவைத் தேர்தல்கள் குறித்து ராகுல் பேசியதாவது:

மத்தியபிரதேசத்திலும், சத்தீஸ்கரிலும் காங்கிரஸ் வெல்வது உறுதி. தெலங்கானாவில் காங்கிரஸுக்கு வெற்றி வாய்ப்பு உள்ளது. ராஜஸ்தானில் கடும் போட்டி இருந்தாலும், காங்கிரஸால் வெல்ல முடியும்.

கர்நாடக பேரவைத் தேர்தல் எங்களுக்கு மிக முக்கியப் படிப்பினையைக் கற்றுத் தந்தது. பா.ஜ.க.வின் திசைதிருப்பும் முயற்சியை முறியடித்து, மக்கள் மத்தியில் எங்களது தெளிவான கண்ணோட்டத்தை முன்வைத்தோம். அதன் வாயிலாக எங்களுக்கு வெற்றி கிடைத்தது என்றார்.

'பா.ஜ.க.வுக்கு எதிர்பாராத முடிவு': 'ஊடகங்களை பா.ஜ.க. கட்டுப்படுத்தி வரும் தற்போதைய சூழலில், எதிர்க்கட்சிகள் அதற் கேற்ப தகவமைத்துக் கொண்டு, ஒன்றுபட்டு பணியாற்றி வருகிறோம். இன்று இந்தியாவின் 60 சதவீத மக்கள்தொகையை நாங்கள் (எதிர்க்கட்சிகள்) பிரதிபலிக்கிறோம். எனவே, 2024 மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க.வுக்கு எதிர்பாராத முடிவு கிடைக்கும்' என் றார் ராகுல்.

'அரசு நினைத்தால் நாளையே மகளிர் இடஒதுக்கீடு': அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத்தொடரில், மகளிர் இடஒதுக்கீடு மசோதா நிறைவேற்றப்பட்டது.

இதுகுறித்து பேசிய ராகுல், 'அரசு நினைத்தால் நாளையே கூட மகளிர் இடஒதுக்கீட்டை அமல்படுத்த முடியும். அதற்கு மக்கள் தொகை கணக்கெடுப்போ அல்லது தொகுதி மறுவரையறையோ தேவையில்லை.

அதானி விவகாரத்தில் புதிதாக வெளியான தகவல்களில் இருந்து மக்களைத் திசைதிருப்பவே நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத்தொடரை மத்திய அரசு நடத்தியுள்ளது.

10 ஆண்டுகளுக்கு பிறகு இட ஒதுக்கீட்டு பலனை மகளிர் பெறலாம் என்று மத்திய பா.ஜ.க. அரசு கூறுகிறது. ஆனால், மகளிர் இட ஒதுக்கீடு உடனடியாக அமல்படுத்தப்பட வேண்டுமென காங்கிரஸ் விரும்புகிறது' என்றார். மக்களவை, பேரவைகளில் பெண்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு வழங்க வகை செய்யும் அரசமைப்புச் சட்டத் திருத்த மசோதா நாடாளுமன்றத்தில் சில தினங்களுக்கு முன்பு நிறைவேற்றப்பட்டது.

இந்த மசோதாவின்படி, மக்கள் தொகை கணக்கெடுப்பு அடிப்படையிலான தொகுதி மறுவரையறைக்குப் பிறகு மகளிர் இடஒதுக்கீடு அமலாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக்கழச் செயலாளர்கள், ஆலோசனைக் கூட்டம் நேற்று (25.09.2023, திங்கட்கிழமை) மாலை சென்னை, ஓட்டேரி, ஸ்டாரன்ஸ் சாலை, எம்.கே.டி.மகாலில் அவைத்தலைவர் கோ.ஏகப்பன் தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில், சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் பி.கே.சேகர்பாபு சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் கழக நிர்வாகிகள், முன்னணியினர் பங்கேற்றனர்.

மாநகராட்சி கழக மாமன்ற உறுப்பினர்கள்

மக்கள் குறைகளைக் கேட்க வேண்டும்! ஆய்வுக்குச் செல்ல வேண்டும்; மண்டலக்குழுத் தலைவர்கள் துறை சார்ந்த அதிகாரிகளுடன் ஆய்வு நடத்துவீர்!

சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் அமைச்சர், மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு வலியுறுத்தல்!

சென்னை, செப்.26- சென்னை கிழக்கு மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதிக்கழக செயலாளர்கள், ஆலோசனைக் கூட்டம் நேற்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு சிறப்புரையாற்றி னார்.

அப்போது மாமன்ற உறுப்பினர்களுக்கும், மண்டலக்குழுத் தலைவர்களுக்கும் அறிவுரைகளும், வேண்டுகோள்களும் வழங்கினார்.

சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழச் செயலாளர்கள், ஆலோசனைக் கூட்டம் 25.09.2023 திங்கட்கிழமை மாலை 6.30 மணியளவில் அன்று சென்னை, ஓட்டேரி, ஸ்டாரன்ஸ் சாலை, எம்.கே.டி.மகாலில் அவைத்தலைவர் கோ.ஏகப்பன் தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில், சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளரும், இந்து சமய அறநிலையத் துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் பி.கே.சேகர்பாபு சிறப்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில் சென்னை மாநகர மேயர் பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர் ப.தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ப.ரங்கநாதன், கே.எஸ்.ரவிச்சந்திரன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் பி.கே.மூர்த்தி, கே.சந்துரு, கே.எஸ்.எம்.நாதன், எம்.விஜயகுமார், மற்றும் பரிதிஇளம்சுருதி, கவிஞர்.நன்மாறன், என்.பி.எம்.ஷேக்அப்துல்லா, மாவட்ட நிர்வாகிகள் தேவ ஜவஹர், ஜி.மகாதேவன், புனிதவதி எத்திராஜன், இசட்.ஆசாத், பகுதிக் கழக செயலாளர்கள் செ.தமிழ்வேந்தன், எம்.சாமிக்கண்ணு, கூ.பி.ஜெயின், வே.வாசு, ஐ.சி.எப்.வ.முரளிதரன், எ.நாகராசன், டி.எஸ்.பி. ராஜகோபால், எம்.டி.ஆர். நாகராஜ், சொ.வேலு, வி.சுதாகர், எஸ்.ராஜசேகர், எஸ்.முரளி, பொதுக்குழு உறுப்பினர்கள். கோ.மணி, டி.வி.செம்மொழி, சாவித்திரி வீரராகவன், பி.ஜே.துளசிங்கம், பி.உதயசங்கர், சரிதா மகேஷ் குமார், பி.ரமேஷ் (எ) நீல கண்டன், எம்.இப்ராஹிம் கனி இரா.கலைச்செல்வி, டாக்டர். ஏ.பி.பூர்ணிமா, அ.நிர்மலா தேவி, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் டி.லோகேஷ், வானவில் விஜய், நா.துலுக்காணம், விஜய், எல்.பி.எப்.மோகன், எம்.பிரோஸ்கான், பி.விஜய் குமார், எம்.விநாயகம், துரைக்கண்ணன், ஆர்.எஸ்.சித்திக், ராஜாமுகம்மது, மா.அசோக்குமார், கு.கிருஷ்ணமூர்த்தி, து.ஆயிரம், எல்.சம்பத்குமார், பிரதீப்குமார், சுதாதீனதயாளன், ராஜேஸ்வரி பூரீதர், டாக்டர்.ஜி.சாந்தகுமாரி, ஜி.வி.நாகவள்ளி மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் வட்டக் கழக செயலாளர் மா.ருத்ர மூர்த்தி நன்றி கூறினார்.

துறைமுகம் மேற்கு பகுதி துணைச் செயலாளரும் 59-வது வார்டு மாமன்ற உறுப்பினருமான கே.சரஸ்வதி அவர்களின் மறைவிற்கும், திரு.வி.க.நகர் தெற்கு பகுதி 75 'அ' வட்டக் கழகத்தை சார்ந்த மாவட்ட பிரதிநிதி ந.ராஜேந்திரன் மறைவிற்கும் இக்கூட்டம் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்தும் அவர்களை இழந்து வாடும் அவர்களது குடும்பத் தினருக்கு ஆறுதல் தெரிவித்தும் தீர்மானம் நிறைவேற்றியது.

"சொன்னதை செய்வோம் செய்வதைத்தான் சொல்வோம்" என்ற தாரக மந்திரத் திற்கேற்ப 2021 சட்டமன்ற தேர்தலில் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதியான குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூபாய் 1000 உரிமைத் தொகை தருவோம் என்றதன் அடிப்படையில்.. கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை உருவாக்கி, அத் திட்டம் 15 செப்டம்பர் 2023 பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளில் நிறைவேற்றி, ஒரு கோடியே ஆறு லட்சத்து ஐம்பதாயிரம் பெண்களுக்கு அவரவர் வங்கி கணக்கில் ரூபாய் 1000 கிடைக்கச் செய்து அவர்களின் வாழ்வில் ஒளியேற்றிய கழகத் தலைவரை மனமார பாராட்டி இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது.

குடும்ப உறுப்பினர்கள் மூளைச்சாவு நிலையை அடைந்த துயரச் சூழலிலும் அவர்களின் உடல் உறுப்புகளை தானமாக அளித்திட்ட குடும்பங்களின் தன்னலமற்ற தியாகத்தினால் பல நூற்றுக்கணக்கான நோயாளிகளுக்கு வாழ்வளித்த அவர்களின் செயலை, தியாகத்தை போற்றிடும் வகையில் இறக்கும் முன் உறுப்பு தானம் வழங்குவோரின் இறுதிச்சடங்குகள் இனி அரசு மரியாதையுடன் மேற்கொள்ளப்படும் என அறிவித்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை மனமார பாராட்டி வணங்கி இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் காட்டிய ஜனநாயக வழியில் பகுத்தறிவு செயல்பாட்டில் பயணித்து பல போராட்டங்கள், நெருக்கடிகள், சிறைவாசங்கள், தியாகங்கள், மிரட்டல்கள், பெரும் வெற்றிகள், படுதோல்விகள் எனக் கண்டு பவள விழா ஆண்டில் அடியெடுத்து வைக்கும் பெருமைமிகு இயக்கமாம் நம் இயக்கத்தின் தலைவர் வேலூரில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் விடுத்த அறைகூவலின்படி ஒன்றியத்தில் ஆட்சிமாற்றம் ஏற்பட INDIA கூட்டணியின் வெற்றிக்கு முழுமூச்சுடன் செயல்பட முடிவெடுத்தும். மாவட்டக் கழகம் அறிவிக்கும் கலைஞர் நூற்றாண்டு விழா இரண்டாம் கட்ட நிகழ்ச்சிகளை எழுச்சியோடு கொண்டாட உறுதியேற்றும் இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது.

மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தத்தம் பகுதிகளில் மக்களிடம் சென்று அவர்களிடம் குறைகளைக் கேட்டறிந்து அதனை நிறைவேற்ற உரிய அதிகாரிகளைத் தொடர்புகொண்டு விரைந்து முடிக்க துணை நிற்க வேண்டும். நடைபெறும் பணிகளை அவ்வப்போது ஆய்வு மேற்கொண்டு விரைவுபடுத்த வேண்டும். மேலும் மண்டலக் குழுத் தலைவர்களும், துறை சார்ந்த அதிகாரிகளும் இணைந்து மாநகராட்சி சார்பில் நடைபெற்று வரும் பணிகளை ஆய்வு செய்து விபரங்களைத் தெரிவிக்க வேண்டும்.

மேற்கண்டவாறு தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. தலைமை! என்.கிருஷ்ணமூர்த்தி வரவேற்புரை!

எல்லாபுரம் ஒன்றியம் தண்டலத்தில் மாபெரும் பொதுக்கூட்டம்!

அமைச்சர் ஆர்.காந்தி - பேராசிரியர் சுப.வீரபாண்டியன் சிறப்புரை!

திருவள்ளூர், செப்.26- திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.கழக இலக்கிய அணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி இன்று (26.09.2023 - செவ்வாய்க்கிழமை) மாலை 6 மணியளவில் எல்லாபுரம் வடக்கு ஒன்றியம், தண்டலம் ஊராட்சியில் நடைபெறுகிறது.

இதற்கு திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் தலைமை வகிக்கிறார்.

மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் தண்டலம் என்.கிருஷ்ணமூர்த்தி, வெ.அரிதாஸ், ப.முல்லைவேந்தன், ஜெ.ஜோதிமுருகன், ஜி.வேலு, ஆர்.கஜேந்திரன், கு.நாகராஜ், கொரஞ்சூர் எஸ்.முனுசாமி, அக்கரை ஆர்.ரஞ்சித், இ.எம்.ராஜேஷ், வரவேற்புரையாற்றுகின்றனர்.

பி.ஜே.மூர்த்தி, மு.பகலவன், எம்.எல்.ரவி, மு.கதிரவன், கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, எஸ்.ரமேஷ், ஏ.வி.ராமமூர்த்தி, ஆ.சத்தியவேல், பா.செ.குணசேகரன், பி.வெங்கடாசலபதி, டாக்டர் பரிமளம், கே.சுப்பிரமணி, அபிராமி குமரவேல், அப்துல்ரஷித், கே.வி.லோகேஷ், வி.பி.ரவிக்குமார், ஜெயலலிதா. கே.சம்பத், சி.சுமன், பா.தனசேகர், கே.ராஜேஷ், கோல்டுமணி முன்னிலை வகிக்கின்றனர்.

அமைச்சர் ஆர்.காந்தி, திராவிட இயக்க தமிழர் பேரவைத் தலைவர் சுப.வீரபாண்டியன், மாநில இலக்கிய அணி செயலாளர் வி.பி.கலைராஜன், மாநில இலக்கிய அணித் தலைவர் புலவர் இந்திரகுமாரி, துணை செயலாளர் நந்தனம் நம்பிராஜன், கும்முடிப்பூண்டி கி.வேணு, க.சுந்தரம், இ.ஏ.பி.சிவாஜி, ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ, சி.எச்.சேகர், ஜி.ஸ்டாலின், கே.ஜி.பாஸ்கர்சுந்தரம், வெ.அன்பு வாணன், ஏ.ஆர்.டி.உதயசூரியன் சிறப்புரையாற்றுகின்றனர்.

ஒன்றிய நகர பேரூர் செயலாளர்கள் மு.மணி பாலன், டி.கே.சந்திரசேகர், கே.வி.ஆனந்தகுமார், ஜான் (எ) பொன்னுசாமி, எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ், பா.சுகுமாறன், நா.செல்வசேகரன், கா.சு.ஜெகதீசன், ந.பரிமளம், ஜி,ரவிக்குமார், இரா.அறிவழகன், பி.முத்து, க.சு.தமிழ்உதயன், கே.ஆர்.குமரவேல், எம்.கேசவன், அத்தி பட்டு ஜி.ரவி, மு.ராசத்தி செல்வசேகரன், ருக்மணி மோகன்ராஜ், சித்ராமுனு சாமி, கோ.சுதாகர், எஸ்.ராமஜெயம், சாரதம்மாள் முத்துசாமி, அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், தலைவர்கள், துணை தலைவர்கள் பங்கேற்கின்றனர்.

முடிவில் எல்லாபுரம் வடக்கு ஒன்றிய பொருளாளர் ஜி.ரவி நன்றியுரையாற்றுகிறார்.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில்

ஒன்றிய - நகர - பேரூர் - பகுதி வாரியாக வாக்குச்சாவடி முகவர்கள் கூட்டம்!

மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் உள்ள உத்திரமேரூர். காஞ்சிபுரம். மதுராந்தகம். செய்யூர். சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஒன்றிய. நகர. பேரூர். பகுதி கழகங்களில் அடங்கியுள்ள வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA2) மற்றும் வாக்குச்சாவடி முகவர்கள் (BLC). கலந்தாலோசனைக் கூட்டம் கீழ்க்கண்ட தேதிகளில் நடைபெற உள்ளது அது சமயம் சம்பந்தப்பட்ட ஒன்றியம். நகர. பேரூர். பகுதி செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தை முறைப்படி நோட்டீஸ் அச்சடித்து. தகவல் தெரிவித்து ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். சேலத்தில் டிசம்பர் 17 அன்று நடைபெற உள்ள 2வது இளைஞர் அணி மாநில மாநாட்டில் கலந்துகொள்ளும் இளைஞர்களின் பெயர் பட்டியலை தயாரித்திட கோருகிறேன்.

நாள்	கிழமை	நேரம்	ஒன்றியம்
01.10.2023	ஞாயிற்றுக்கிழமை	10:00	அச்சரப்பாக்கம் தெற்கு
01.10.2023	ஞாயிற்றுக்கிழமை	11:30	அச்சரபாக்கம்வடக்கு
	ஞாயிற்றுக்கிழமை	01.00	அச்சரபாக்கம் பேரூர்
03.10.2023	செவ்வாய்க்கிழமை	09.00	சித்தாமூர் கிழக்கு
	செவ்வாய்க்கிழமை	11.00	சித்தாமூர் மேற்கு
	செவ்வாய்க்கிழமை	01.00	கருங்குழி பேரூராட்சி
	செவ்வாய்க்கிழமை	02.00	மதுராந்தகம் தெற்கு
	செவ்வாய்க்கிழமை	03.00	மதுராந்தகம் வடக்கு
	செவ்வாய்க்கிழமை	04.00	மதுராந்தகம் நகரம்
05.10.2023	வியாழக்கிழமை	09.00	வாலாஜாபாத் தெற்கு
	வியாழக்கிழமை	10 .00	வாலாஜாபாத் பேரூர்
	வியாழக்கிழமை	12.00	காஞ்சிபுரம் தெற்கு
06.10.2023	வெள்ளிக்கிழமை	09.00	வாலாஜாபாத் வடக்கு
	வெள்ளிக்கிழமை	11.00	காஞ்சிபுரம் வடக்கு
	வெள்ளிக்கிழமை	02.00	காஞ்சிபுரம் மாநகரம்பகுதி 1.
	வெள்ளிக்கிழமை	03.00	காஞ்சிபுரம் மாநகரம்பகுதி 2 .
	வெள்ளிக்கிழமை	04.00	காஞ்சிபுரம் மாநகரம்பகுதி 3 .
	வெள்ளிக்கிழமை	05.00	காஞ்சிபுரம் மாநகரம்பகுதி 4 .
08.10.2023	ஞாயிற்றுக்கிழமை	09.00	திருக்கழுக்குன்றம் தெற்கு
	ஞாயிற்றுக்கிழமை	11.00	இலத்தூர் வடக்கு
	ஞாயிற்றுக்கிழமை	01.00	இலத்தூர் தெற்கு
	ஞாயிற்றுக்கிழமை	02.00	இடக்கழி நாடு பேரூர்
	ஞாயிற்றுக்கிழமை	03 .00	உத்திரமேரூர் ஒன்றியம் , பேரூர்
	ஞாயிற்றுக்கிழமை	04 .00	சாலவாக்கம் ஒன்றியம்

க.சுந்தர், எம்.எல்.ஏ.
செயலாளர், காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க.

தலைமை செயலகத்தில் நேற்று (25.9.2023) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் தலைமையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பாக வெளியிடப்பட்ட பல்வேறு அறிவிப்புகளின் செயலாக்கம் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைச் செயலாளர் ஜி.லட்சுமி பிரியா, ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குனர் த.ஆனந்த், பழங்குடியினர் நல இயக்குனர் எஸ்.அண்ணாதுரை மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

கவியரங்கம் - வாழ்த்தரங்கம் - வாழ்க்கை வரலாற்று ஆவணப் படம் திரையிடல்!

கவிப்பேரருவி ஈரோடு தமிழன்பன் 90வது பிறந்தநாள் தொடக்க விழா!

கனிமொழி கருணாநிதி எம்.பி. - திருச்சி சிவா எம்.பி. - தமிழச்சி தங்கப்பாண்டியன் எம்.பி. வாழ்த்துரை!

சென்னை, செப். 26- கவிப்பேரருவி ஈரோடு தமிழன்பன் 90வது பிறந்த நாள் தொடக்க விழா. வாழ்க்கை வரலாறு ஆவணப் படம் திரையிடல் நிகழ்ச்சி 28.9.2023 வியாழன் பிற்பகல் 3 மணி முதல் இரவு 7.30 மணி வரை கோட்டூர்புரம் தமிழ் இணையக் கல்விக் கழக அரங்கத்தில் (அண்ணா நூற்றாண்டு நூலகம் அருகில்) நடைபெறுகிறது.

பிற்பகல் 3 மணிக்கு கண் திறக்கும் கவி வானம் நிகழ்வில் கவிஞர் கவிமுகில் வரவேற்புக் கவிப் பாடுகிறார். கவிஞர் கபிலன் தொடக்க கவிப் பாடுகிறார். நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கப்பாண்டியன் தலைமை வகித்து வாழ்த்துகிறார்.

இந்நிகழ்வில் கவிஞர் யுக பாரதி, கவிஞர் தமிழமுதன் பேராசிரியர் கவிஞர் அப்துல் ரசாக் ஆகியோர் கவிதைப் படைக்கின்றனர்.

இதையடுத்து, மலர் வானம் புகு காதை - வாழ்த்தரங்கத்தில் பேராசிரியர் இராம.குருநாதன் தொடக்க உரையாற்றுகிறார். வி.ஐ.டி. பல்கலைக் கழக வேந்தர் முனைவர் கோ.விசுவநாதன் தலைமை உரையாற்றுகிறார்.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் திருச்சி சிவா, மூத்த வழக்கறிஞர் சிகரம் செந்தில்நாதன், ரகமத் அறக்கட்டளைத் தலைவர் மு.முஸ்தபா, தஞ்சை பாரத் கல்வி நிறுவனங்கள் தாளாளர் புனிதா கணேசன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

அடுத்து, புத்தகம் மலரும் பொன்மாலைப் பொழுது - நூல் வெளியீடு நிகழ்வுக்கு வழக்கறிஞர் அ.அருள்மொழி தொடக்கவுரையாற்றுகிறார்.

ஈரோடு தமிழன்பனின் 82 கவிதை நூல்களின் பெருந்தொகுப்பு எரிதழலும் இளங்காற்றும், தி.அமிர்தகணேசன் எழுதியுள்ள 'நம் கால மகாகவி' (ஒரு வாசக நோக்கில்) நூல்களை நீதியரசர் ச.ஜெகதீசன் தலைமையேற்று வெளியிடுகிறார்.

நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி எம்.பி. நூலினை பெற்று உரையாற்றுகிறார்.

சென்னை பல்கலைக் கழகத் தமிழ்மொழித் துறைத் தலைவர் பாரதி - பாரதிதாசனியல் அறிஞர் ய.மணிகண்டன் ஆய்வுரையாற்றுகிறார்.

நிறைவின் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் 3.8.2023 அன்று வெளியிடப்பட்ட ஈரோடு தமிழன்பன் வாழ்க்கை வரலாற்று ஆவணப்படம் 'மகாகவி' திரையிடல் நிகழ்வு நடைபெறுகிறது. இதில் இயக்குநர் அமீர் அப்பாஸ், கவிஞர் தி.அமிர்தகணேசன், விழிகள் தி.நடராசன், பேரா.ஆதிரா முல்லை, கவிஞர் புனிதஜோதி, கவிஞர் வித்யா மனோகர் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி தொகுதிக்குட்பட்ட திருத்தணி கிழக்கு ஒன்றியம் டி.சி.கண்டிகையில் கால்நடை துறை சார்பில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கால்நடை திறப்பு விழா நடைபெற்றது. இதில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ புதிய கால்நடை நிலையத்தை திறந்து வைத்து கால்நடைகளுக்கு சொட்டு மருந்து வழங்கினார். உடன் திருத்தணி கிழக்கு ஒன்றிய செயலாளர் ஆர்த்தி ரவி, கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குனர் தாமோதரன், மற்றும் மாவட்ட ஒன்றிய கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கால்நடை துறை மருத்துவர்கள் அரசு அதிகாரிகள் உள்ளனர்.